செ. கு. எண் : 129　　　　　　　　　　நாள் : 04-04-2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## “மகாவீர் ஜெயந்தி” வாழ்த்துச் செய்தி

பகவான் மகாவீரர் பிறந்த நாளைக் கொண்டாடும் சமண சமயப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த மகாவீர் ஜெயந்தி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“தொடக்கத்தில் பாவச் செயல்கள் இன்பம் தந்தாலும், முடிவில் துன்பமே தரும்” என்று போதித்தவர் அருளாளர் பகவான் மகாவீரர். அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டி வாழ வேண்டும் என்ற அற நெறியைப் பரப்பிய பகவான் மகாவீரர், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமையும், கொல்லாமையுமே அற நெறி எனக் காட்டி அகிம்சை வழியையும், அன்பு வழியையும் மக்களுக்கு உணர்த்தியவர் ஆவார்.

உலகம் சிறந்து விளங்க வழி காட்டிய பெருமான் பகவான் மகாவீரரின் பிறந்த நாளை மிகுந்த மன மகிழ்ச்சியுடன் கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் என் உளமார்ந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9